ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2117/47 - 2019 අප්‍රේල් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.04.04
**2117/47 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், ஹொரனை பிரதேச செயலகப் பிரிவில், ஒவிடியாகல எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2018.05.17ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கேஏ/டீஎஸ்ஓ/2018/334 இல் குறிப்பிடப்பட்ட மீள் நடைமுறை உப அட்டவணையில் காணித் துண்டுகள் 'ஏ' மற்றும் 'பி' இல் குறிப்பிடப்பட்டுள்ள 4.0469 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

*01.* **துண்டு 'ஏ' – எல்லகந்த தோட்டம் – விஸ்தீரணம்:** 0.1701 **ஹெக்டயார்**

வடக்கு: கொடகல தோட்ட நிறுவனம் உரிமை கோரும் பிரவேசப் பாதை ; கிழக்கு : துண்டு பி; தெற்கு: கொடகல தோட்ட நிறுவனம் உரிமை கோரும் எல்லகந்த தோட்டம் மற்றும் பாதை (பி.ச.) ; மேற்கு: பாதை (பி.ச.).

*02.* **துண்டு 'பி' – எல்லகந்த தோட்டம் – விஸ்தீரணம்:** 3.8768 **ஹெக்டயார்**

வடக்கு: கொடகல தோட்ட நிறுவனம் உரிமை கோரும் பிரவேசப் பாதை ; கிழக்கு : கொடகல தோட்ட நிறுவனம் உரிமை கோரும் பிரவேசப் பாதை ; தெற்கு: கொடகல தோட்ட நிறுவனம் உரிமை கோரும் எல்லகந்த தோட்டம் ; மேற்கு: துண்டு ஏ.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல. : 4-3/4/2017/பீ/532.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர", ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, பெப்புருவரி 06.

04-629

1A – G 29826 – 16(2019/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.